**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆரணி திருவண்ணாமலை மாவட்டம்.</u>**

**<u>அசல் வழக்கு எண்.122/2017</u>**

**நாள் - 11.03.2024.**
**<u>பெயர். திரு. பரமேஸ்வரன் த/பெ. பூங்காவனம்</u>**

**<u>வா.சா.2 சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**1. என் தந்தை பெயர் பூங்காவனம் என்றால் சரி தான். பூங்காவனத்துடன் உடன் பிறந்தவர்கள் யார் யார் என்றால் பூங்காவனம், காந்தம்மாள், சுப்பிரமணி மற்றும் வினாயகம் ஆகும். பூங்காவனத்திற்கு அவர் தந்தையிடமிருந்து பாகமாக குன்னத்தூர் கிராமத்தில் வீடு மற்றும் நிலம் கிடைத்தது என்றால் சரியல்ல. வீடு மட்டும் தான் கிடைத்தது.**

**2. குன்னத்தூர் கிராமத்தில் உள்ள நிலத்தை பூங்காவனமோ, அவர் உடன் பிறந்தவர்களோ இது வரை கிரயம் செய்யவில்லை என்றால் சரி தான். தற்போது பூங்காவனம் உயிருடன் இருக்கிறாரா என்றால் உயிருடன் இல்லை. அவருடன் பிறந்தவர்களும் தற்போது உயிருடன் இல்லை.**

**3. சுப்பிரமணியின் மனைவியின் பெயர் கன்னியம்மாள் என்றால் சரி தான். வினாயகத்தின் மனைவியின் பெயர் ரமணியம்மாள் என்றால் சரி தான். வினாயகத்தின் மகள் தான் இவ்வழக்கு பிரதிவாதி என்றால் சரி தான். அவருடன் கலா, செல்வி என இரு சகோதரிகளும் உள்ளார்கள்.**

**4. பூங்காவனத்தின் தந்தையின் வீட்டை 3 பாகமாக பிரித்தார்கள் என்றால் சரியல்ல. தனித்தனியாக வீடு கட்டி தனித்தனியாக பட்டா வாங்கி தனித்தனி சர்வே நெம்பரில் உள்ளது. பூங்காவனத்தின் தந்தையின் சொத்தை தான் மூன்று பாகமாக பிரித்து தனித்தனியாக வீடு கட்டி பட்டா வாங்கிக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. தனித்தனியாக அவரவர்கள்**

சம்பாதித்த சொத்து ஆகும்.

5. என் தந்தை பூங்காவனம் சம்பாதித்து வாங்கியதற்கு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அவ்வாறு சம்பாதித்து வாங்கிய சொத்து தான் வழக்கு சொத்து என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் பழைய சர்வே எண்.151/பி என்றால் சரி தான். சர்வே எண்.151/பி ஆனது பூங்காவனம், சுப்பிரமணி மற்றும் வினாயகம் ஆகியோர் பெயரில் தனித்தனி பட்டாவாக கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரி தான்.

6. தற்போது சர்வே எண்.151/பி என்பது புதிய சர்வே எண்.340/33 பட்டா எண்.455 ஆக ரமணியம்மாள் பெயரில் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரி தான். தற்போது சர்வே எண்.151/பி என்பது புதிய சர்வே எண்.340/34 பட்டா எண்.111 ஆக கன்னியம்மாள் பெயரில் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரி தான்.

7. தற்போது சர்வே எண்.151/பி என்பது புதிய சர்வே எண்.340/35 பட்டா எண்.684 ஆக பரசுராமன், ரமணியம்மாள் மற்றும் கன்னியம்மாள் பெயரில் கூட்டாக கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி சர்வே எண்கள் ஆதியில் பூங்காவனம், சுப்பிரமணி மற்றும் வினாயகம் ஆகியோரின் தந்தையிடமிருந்து வாய்மொழி பாகமாக கிடைத்த சொத்துக்கள் என்றால் சரியல்ல.

8. அவ்வாறு வாய்மொழி பாகத்தில் குப்பைகளை கொட்ட பொதுவாக சர்வே எண்.340/35 ஒதுக்கப்பட்டிருந்தது என்றால் சரியல்ல. மேற்படி பட்டா எண்.684-ஐ கூட்டாக இருந்ததை என் செல்வாக்கை பயன்படுத்தி பட்டா எண்.684-ஐ அடித்துவிட்டு, பட்டா எண்.576 என மாற்றி என் பெயரில் பட்டாவை வாங்கிக்கொண்டேன் என்றால் சரியல்ல.

9. வழக்கு சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியும், சர்வே எண். 340/35 ஆகும் பட்டா எண்.576. பட்டா எண்.684 என்பது பட்டா எண்.576என எவ்வாறு மாறியது என காண்பிக்க ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பட்டா எண்.684 பட்டாவே கொடுக்கவில்லை என் பெயருக்கு தான் பட்டா எண்.576-ஐ கொடுத்தார்கள்.

10. நான் பட்டா எண்.684 மற்றும் பட்டா எண்.576-க்கான அ பதிவேடு மற்றும் அடங்கலை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் அ பதிவேடு மற்றும் அடங்கலை என் செல்வாக்கை பயன்படுத்தி திருத்தியதால் தான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

11. பிரதிவாதி அ பதிவேடு மற்றும் அடங்கலை சர்வே எண்.340/35-க்கு தாக்கல் செய்துள்ளார்களா என்றால் தாக்கல் செய்துள்ளார்கள். அவ்வாறு பிரதிவாதி தாக்கல் செய்த அ பதிவேடு மற்றும் அடங்கலில் பரசுராமன் மற்றும் இருவர் என்ற பெயர்கள் அடிக்கப்பட்டு, பட்டா எண்.576க்கு பரசுராமன் பெயர் மட்டும் போட்டுள்ளது என்றால் அவ்வாறு நாங்கள் அடிக்கவும் இல்லை, எங்களுக்கு பட்டாவும் கொடுக்கவில்லை.

12. பிரதிவாதி தாக்கல் செய்த ஆவணத்தில் பட்டா எண்.684 சுழிக்கப்பட்டு அடிக்கப்பட்டும், பட்டா எண்.576ஆக மாற்றம் செய்யப்பட்டு பரசுராமன் பெயருக்கு மட்டும் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பட்டா எண்.576-க்கு முன்பு என் பெயரில் இருந்ததற்கு இப்பட்டாவை தவிர வேறு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

13. கிரய ஆவணம் வாங்கியதாக ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. என் தந்தை ஆதியில் இருந்து அனுபவித்து வந்தார். எனக்கு எத்தனை மக்கள் என்றால் மூன்று பேர்

**ஆகும். வழக்கு சொத்தை தவிர வேறு ஏதேனும் சொத்து இருக்கிறதா என்றால் சர்வே எண்.340/32 வீடு உள்ளது.**

**14. சர்வே எண். 340/35 என்பது கார்னர் இடம் என்றால் சரி தான். அதற்கு வடக்கு மற்றும் கிழக்கு புறம் எல்லைகளாக ரோடு உள்ளது என்றால் சரி தான். ரமணியம்மாளின் வாரிசுகள் அவர்களது பாகத்தை பிரதிவாதிக்கு விற்றுவிட்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.**

**15. அவ்வாறு பிரதிவாதிக்கு கிரயம் செய்ய பஞ்சாயத்து பேசி வாங்கி கொடுத்ததே நான் தான் என்றால் சரியல்ல.**

**( பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது).**

/ஒப்// பி .டி.சதீஷ்குமார்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்.